1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டிய துணைக் கேள்வியாக இருக்க வேண்டும் மற்றவற்றுக்கு அமைச்சரிடத்தில் தகவல் இருக்காது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

அ. ராஜா சுப்பிரமணியம் குழுவின் பரிந்துரைப்படி நெசவாளர்களுக்கு சட்டம் கொண்டு வருவது குறித்து.

திரு. ரா. உமாநாத் : இந்த அவை ஆரம்பத்திலே நெசவாளர்கள் மாநிலம் பூராவும் மறியல் செய்தபோது கனம் அமைச்சர் அவர்கள் ராஜா சுப்பிரமணியம் ரிப்போர்ட் அடிப்படையில் சட்டம் இண்ட்ரட்யூஸ் பண்ணப்படும் என்று சொன்னார்கள். நாளைக்கு சபை முடியப் போகிறது. இன்றுவரை மசோதா சர்குலேட் பண்ணப்படவில்லை. அமைச்சர் அவர்கள் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : ராஜா சுப்பிரமணியம் கமிட்டி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வரைவு மசோதா தயாரிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் தொழிலாளர் நல அமைச்சர், பஞ்சாலைத்துறை அமைச்சர் ஒப்புதல் பெற்று உறுப்பினர்களுக்குக் கொடுப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. நாளைக்கு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதை மொழிவார்கள்.

ஆ. விவசாயிகள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : தொடர்ந்து விவசாயிகள் கிளர்ச்சியை ஒட்டி இப்போது பல இடங்களில போலீஸ் கைது செய்துகொண்டே இருப்பதாகத் தகவல வந்திருக்கிறது. இதுவரை எத்தனை இடங்களில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் ? அமைச்சர் அவர்கள் அதுபற்றி 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை வைத்தால் பூராவுமாக அதைப்பற்றி உணர்ந்து கொள்ள முடியும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக கைது செய்யப்பட்டு........